விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 274 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 02 திங்கட்கிழமை (19.09.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## சமஷ்டி அடிப்படையில் தீர்வு இந்தியாவின் நிலைப்பாடும் இதுவே

### பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்



(வவுனியா)

அரசியல் தீர்வு என்பது ஒரு சமஸ்டி கட்டமைப்பிலான ஒரு அதிகார பகிர்வு அர்த்த முள்ளதாக இருக்க வேண்டும். அத்த கைய அதிகார பகிர் வையே ஏற்றுக் கொள்வோம். இந்தியாவும் அந்த நிலைப்பாட்டிலேயே உள்ளது என தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந் திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள தமிழரசுக் கட்சி ▶02

## தியாக தீபம் திலீபனின் 4ஆம் நாள் நினைவேந்தல்



## வவுனியா மாமடு காட்டுப் பகுதியில் திடீர் தீப்பரவல்



(வவுனியா)

வவுனியா மாமடு பகுதியிலுள்ள காட் டுப்பகுதி ▶04

### ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில்

# இலங்கை தொடர்பாக ஒக்.7 வாக்கெடுப்பு

(ஜெனிவா)

**இலங்கை தொடர்பில் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை மீதான வாக்கெடுப்பு ஒக்டோபர் 7ஆம் திகதி நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

பிரித்தானியா தலைமையிலான 7 நாடுகள் இந்த பிரேரணையை முன்வைத்துள்ளன

இதேவேளை எதிர்வரும் 24 ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை அமர்வில் வெளிவிவகார அமைச்சர் ▶04



## பனை மரங்களுக்கு தீவைத்த விசமிகள்

### உடுவிலில் சம்பவம்

(யாழ்பாணம்)

உடுவில் தொம்பை வைரவர் ஆலய வளாகத்தினுள் நின்ற பனை மரங்களுக்கு விசமிகள் தீ வைத்தமையால் 20 பனைகள் முற்றாக எரிந்து கருகியுள்ளன.

யாழ்ப்பாணம் தொம்பை வீதியில் உள்ள தொம்பை வைரவர் ஆலய வளாகத்தினை ▶04

### ஐ. எம். எப் ஒப்பந்தம்

## கடன் வழங்குநர்களுக்கு விளக்கமளிக்க அரசு தயார்

(கொழும்பு)

அண்மைய பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல்கள் தொடர்பில் அரசாங்கம் முன்னேற்றம் அடைந்துள்ளது.

இந்த முன்னேற்றம் குறித்து இலங்கையின் கடன் வழங்குநர்களுக்கு அறிவிக்கப்படும் என உலகளாவிய சட்ட நிறுவனமான, கிளிஃ ▶04

## கடன் வசதிகளை வழங்க அரச வங்கிகள் மறுப்பு

### நெருக்கடியில் நெல் சந்தைப்படுத்தல் சபை

(கொழும்பு)

விவசாயிகளிடம் இருந்து நெல்லை கொள்முதல் செய்து களஞ்சியப்படுத்தி, அதன் மூலம் அரிசி விலையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் அரசாங்கத்தின் திட்டம் பின்னடைவை சந்தித்துள்ளது.

அரசு வங்கிகள் கடன் வசதிகளை வழங்க மறுத்ததால், இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அரச அதிகாரி ▶04

## அரசிற்கு எதிராக கொழும்பில் போராட்டம்



(கொழும்பு)

கொழும்பில் நேற்று இரவு அரசுக்கு எதிரான போராட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அரசுக்கு எதிராக இடம்பெற்ற போராட் ▶04

## புதிய இறக்குமதி கொள்கைகள் அறிவிப்பு

(கொழும்பு)

கடந்த மாதம் அறிவிக்கப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்கும் வகையில், புதிய இறக்குமதி கொள்கை திருத்தங்கள் அரசா ▶04

## மகாராணிக்கு ரணில் அஞ்சலி

(லண்டன்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவரது பாரியார் பேராசிரியர் மைத்ரீ விக்கிரமசிங்க மற்றும் இலங்கை தூதுவர் சரோஜா சிறிசேன ஆகி ▶04





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்து



## திருமதி குணநிதி இரவீந்திரன்

எமது பாடசாலையில் மகத்துவமான சேவையாற்றி ஓய்வுபெறும் சிரேஷ்ட ஆசிரியர் திருமதி **குணநிதி இரவீந்திரன்** அவர்களுக்கு மணிவிழா வாழ்த்தினைத் தெரிவிப்பதுடன் அவரின் ஓய்வுக்காலம் மகிழ்ச்சியாகவும் சிறப்பாகவும் அமைய வாழ்த்துகின்றோம்.

சேவை விபரம்
யா/குளமங்கால் றோ.க.த.பாடசாலை (2000-2001)
யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் (2001 - 2009)
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி (2009 - 2022)

**ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்**

(C-4946)

## சமஷ்டி...

அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற மத்திய செயற்குழுக் கூட்டத்தின் பின் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐ.நாவில் இந்தியாவின் கூற்றிலே இலங்கையில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு ஒன்றை கொடுப்பதில் இலங்கை அரசாங்கம் கால இழுத்தடிப்பை செய்து வருகின்றது என்று சொல்லியிருக்கிறார்கள். 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது உள்ளடங்கலாக அதிகார பகிர்வுமுறை செய்யப்பட வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே 13 ஆம் திருத்தச் சட்டத்துடன் இந்த விடயம் நிறைவுக்கு வருகிறது என அவர்கள் சொல்லவில்லை. ஆகவே அந்த நிலைப்பாடு நல்ல நிலைப்பாடு.

ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட போகும் தீர்மானங்கள் தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை நான் பேசியுள்ளேன். அதில் என்ன மாற்றம் தேவை என தெளிவாக சொல்லப்பட்டுள்ளது.

ஆனால் அதனை நிறைவேற்றப் போகிறவர்கள் இணை அனுசரணை நாடுகள். அவர்கள்தான் இறுதியில் அதில் வேறு எதனையும் சேர்த்துக் கொள்ளலாமா, இதைப் பலப்படுத்தலாமா, அப்படி செய்தால் வாக்குகள் கூடுமா, குறையுமா என்கின்ற கடைசி தீர்மானங்களை எடுப்பார்கள் எனத் தெரிவித்தார். (4-7,250)

## நன்றி

யாழ்ப்பாணம் கொழும்பு செல்லும் பஸ் ஒன்றில் பிரயாணம் செய்யும் போது எனது தவறவிடப்பட்ட பொருட்களை (பெறுமதியான தாலிக்கொடி, காப்பு, சங்கிலி, இந்தியப் பணம்) மொத்தமாக 06 மில்லியனுக்கும் மேற்பட்ட பெறுமதியான தங்க ஆபரணங்களையும் பணத்தையும் தவறவிட்ட அனைத்துப் பொருட்களையும் கண்டெடுத்து எனது வீட்டிற்குக் கொண்டு வந்து தந்த காரைநகரைச் சேர்ந்த **கனகசபை தர்மகுலசிங்கத்திற்கு** எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்...

**S.சகாதேவன்**
**மட்டக்குளி**

(12820)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் இருபாலையில் 12 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.**

- பருத்தித்துறை வீதியில் இருந்து 1km தூரத்தில்.
- 2 பரப்பாக (நிலப்பரப்பு) பிரிக்கப்பட்ட நிலையில்.
- BH Lane விக்கினேஸ்வரா சனசமூக நிலையம் அருகாமையில்.
- 18 அடி பாதையுடன் நல்ல சூழல் நன்நீர் ஊற்று நிலம்.
- யாழ். நகரில் இருந்து 4 km தூரம்.
- 1 பரப்பின் விலை (600,000/=) ரூபா ஆறு இலட்சம்.
- பார்வையிடும் நேரம் காலை 9.00 இருந்து மாலை 6.00 மணி வரை.

**077 288 0152, 077 148 8348**

(12822)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## யோகறஞ்சினி நகுலேஸ்வரன்
(சுமதி)

பிறப்பு : 26.01.1967
இறப்பு : 19.09.2019



நம்ப மறுக்குதம்மா எம் இதயம்
நீ பிரிந்து மூன்று வருடங்கள் சென்றாலும்
உன் அழகிய சிரிப்பும்
இனிமை நிறைந்த பேச்சும்
எல்லோரையும் ஈர்க்கும் உன்
வசீகரப் புன்னகையும்
உன் உடலை விட்டு உயிர் பிரிந்ததை
அறிந்து இதயமே உறைந்து போய்
நின்றதை யாரறிவார்?
நீ இறக்கவில்லை
எங்களுடன் உயிரோடுயிராய்
என்றுமே நிலைத்திருப்பாய்.

" சுமதி இல்லம் "
... வீதி, நெல்லியடி, கரவெட்டி. (C-4945)

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பளம் போதுமானதாக இல்லை மீண்டும் போராட்டம் வெடிக்கும்

## ஜோசப் ஸ்டாலின் எச்சரிக்கை

(கொழும்பு)

தற்போதைய பொருளாதார நெருக்கடியில் ஆசிரியர்களுக்கு தற்பொழுது வழங்கப்படும் சம்பளம் போதுமானதாக இல்லாத தால் எதிர்காலத்தில் மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்படும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளிவிட்ட அரசியல் வாதிகள் தற்போது மக்களின் வரிப்பணத்தில் சுகபோகம் அனுபவித்துக்கொண்டு மக்களின் வாழும் உரிமையை பறித்து வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் மக்களின் போராட்டங்களை அடக்கி ஆட்சியாளர்கள் ஒருபோதும் வெற்றி பெறமுடியாது என்பதோடு போராட்டம் ஒரு நாள் இந்த அரசாங்கத்தை அழித்துவிடும் என்றும் அவர் குறிப்பிட்டார். (4)

# அதிகாரப் பகிர்வின் மூலமே இலங்கைக்கு மீட்சி கிடைக்கும்

## கனேடிய எம்.பி ஹரி ஆனந்தசங்கரி

(கொழும்பு)

**அதிகாரப்பகிர்வும் இராணுவமயப் படுத்தலை முடிவிற்கு கொண்டு வருவதும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமான விடயங்கள் என கனடா பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.**



தமிழ் கார்டியனுடனான கருத்துப் பகிர்வின் போது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் பெரிதாக்கப்பட்டுள்ள இராணுவம் குறித்து கரிசனை வெளியிட்டு ஜூன் மாதம் சர்வதேச நாணய நிதியத்திற்கு கடிதம் எழுதியதாக தெரிவித்துள்ள அவர் ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையில் இந்த விடயம் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இராணுவம் பெரிதாக்கப்பட்டுள்ளதாக காணப்படுகின்றது ரஷ்யாவிற்கு எதிராக போரிட்டுக் கொண்டிருக்கும் உக்ரைன் இராணுவத்தை விட இலங்கை இராணுவம் இரண்டு மடங்கு பெரியது.

நாட்டை மீண்டும் நிலையான பொருளாதாரப் பாதைக்கு கொண்டு செல்வது என்பது வடக்கு-கிழக்கிற்கு முழுமையாக அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதிலிருந்து உருவாக வேண்டும்.

வடக்கு-கிழக்கு அபிவிருத்தி செய்யப்படாத நிலையில் காணப்படுகின்றது. வடக்கு-கிழக்கு தனது தொழில் துறையை அபிவிருத்தி செய்வதற்கு சுயாட்சி அவசியம் எனக் குறிப்பிட்ட அவர் வடக்கு-கிழக்கின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மிகவும் குறைவாக உள்ளதையும் இலங்கையின் மொத்த தேசிய உற்பத்திக்கு வடக்கு-கிழக்கின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 4.6 வீதமே பங்களிப்பு வழங்கு வதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதற்கு மாறாக மேல்மாகாணம் 30 வீதம் பங்களிப்பு செய்கின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (4)

# பாடசாலை நேரத்தை அதிகரிக்க வேண்டும்

## அமைச்சர் ரொசான் ரணசிங்க

(கொழும்பு)

நாட்டில் பாடசாலை நேரத்தை மாலை 4 மணிவரை நீடிக்க வேண்டும் என விளையாட்டுத்துறை அமைச்சர் ரொசான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

தம்புள்ளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைத் குறிப்பிட்டுள்ளார்.

அதிகரிக்கப்படும் மேலதிக நேரத்தை மாணவர்களின் விளையாட்டுக்காக ஒதுக்கப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்

விளையாட்டை ஒரு பாடத்திட்டமாகக் கருதி அது மாலை 4 மணிவரை முன்னெடுக்கப்பட வேண்டும் இது மாணவர்களின் பாதுகாப்புக்கு நல்லது.

அதுமட்டுமல்லாமல் பெற்றோர் பிள்ளைகளின் உறவை மேலும் வலுப்படுத்தும், குறைந்தது 2 மணித்தியாலங்களாவது பிள்ளைகள் விளையாட்டில் ஈடுபடவேண்டும் எனத் தெரிவித்தார். (4)

# சர்வகட்சி அரசு அமையாவிட்டால் தேர்தலுக்கு உடன் செல்ல வேண்டும்

## பேராசிரியர் திஸ்ஸ விதாரன

(கொழும்பு)

அரசியல் கட்சிகள் அனைத்தையும் ஒன்றிணைத்து சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்காவிடின் பொதுத்தேர்தலை விரைவாக நடத்துமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தவுள்ளோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் எதிர்வரும் வாரம் முக்கிய பேச்சுவார்த்தையில் ஈடுபட எதிர்பார்த்துள்ளோம் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரன தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கும் நோக்கத்தை தோற்கடிக்க பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷவின் முயற்சி வெற்றி பெற்றுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பொதுஜன பெரமுனவின் அரசாங்கம் செயற்பாட்டில் உள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை நாட்டு மக்கள் முழுமையாக வெறுக்கிறார்கள். மக்களால் கடுமையாக விமர்சிக்கப்படும் தரப்பினருக்கு எதிர்வரும் நாட்களில் முக்கிய அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன. மக்களின் ஆதரவு இல்லாமல் எப்பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது என மேலும் தெரிவித்தார். (4)

# உலக சாதனைக்காக இரத்தான முகாம் நல்லூர் ரோட்டரியால் யாழில் ஏற்பாடு



(யாழ்ப்பாணம்)

உலக சாதனை நிகழ்த்தும் முகமாக உலகளாவிய ரீதியில் சுமார் 1000 இரத்ததான முகாம்களை நடாத்தும் திட்டத்திற்கு அமைவாக நல்லூர் ரோட்டரி கழகத்தினால் இரத்ததான முகாம் மேற்கொள்ளப்பட்டது.

திருவண்ணாமலை அகில் பார்தியா அமைப்புடன் இணைந்து நல்லூர் ரோட்டரிக் கழகத்தினால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்த வங்கியில் நேற்று முன்தினம் இவ் இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டது. இதில் பலர் தானாக முன்வந்து இரத்ததானம் செய்து ஒத்துழைப்பு வழங்கினர்.

இந்த நிகழ்வில் இரத்த தானம் செய்தவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழும் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் நல்லூர் ரோட்டரி கழகத் தலைவர் ரோட்டரியன் தங்கராஜா றவினதாஸ் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கி வைத்தார். (4)

# குடும்பஸ்தர் மீது கோடரியால் தாக்குதல் நவிண்டிலில் சம்பவம்

(கரணவாய்)

வடமராட்சி நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற கைகலப்பில் இரு பிள்ளைகளின் தந்தை கைக்கோடரியால் வெட்டப்பட்ட நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்றுள்ளது.

சம்பவத்தில் கொற்றாவத்தையைச் சேர்ந்த 35 வயதான இருபிள்ளைகளின் தந்தையே இவ்வாறு வெட்டுக்காயங்களுக்கு இலக்காகிய நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (4-60)

# யாழ்.பல்கலையில் சர்வதேச இந்து மாநாடு



(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடத்தினால் நடத்தப்பட்ட "இந்து தரிசனம்" முதலாவது சர்வதேச இந்து மாநாடு அண்மையில் இடம் பெற்றது.

இம்மாநாட்டில் மதத்தலைவர்கள், பேராசிரியர்கள், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆசிரிய மாணவர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (4-33-18)

# குடு போதைப்பொருளுடன் சாவகச்சேரியில் ஐவர் கைது

(சாவகச்சேரி)

குடு போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சாவகச்சேரிப் பொலிஸாரால் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் நாவற்குழிப் பகுதியில் வைத்து பொலிஸார் குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

நாவற்குழி மற்றும் குருநகர் பகுதிகளைச் சேர்ந்த ஐவரே இவ்வாறு சிறிதளவு குடு போதைப்பொருளுடன் கைதாகி உள்ளனர். கைதான சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடன் வசதிகளை...

ஒருவர் தெரிவித்துள்ளார்.

நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் நீல் அல்விஸ் இதனை உறுதிப் படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், "அரச வங்கிகளிடமிருந்து இரண்டு பில்லியன் கடன் பெறுவதற்கான நடவடிக்கை தோல்வியடைந்துள்ளது. இதனால் 30,000 மெட்ரிக் தொன்கள் கையிருப்பை சேகரிக்கும் மற்றும் அரிசியின் சந்தை விலையை கட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் திட்டம் பாதிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ நெல்லை 110 ரூபாய்க்கு கொள்முதல் செய்ய நெல் சந்தைப்படுத்தும் சபை திட்டமிட்டிருந்தது.

முன்னதாக, கடன் கோரப்பட்ட போது அரச வங்கிகள் 250 மில்லியன் ரூபாவை மாத்திரமே விடுவித்திருந்தன.

இதன் மூலம்,நெல் சந்தைப்படுத்தும் சபையினால் 7000 மெட்ரிக் தொன் நெல்லை மட்டுமே கொள்வனவு செய்ய முடிந்தது."என கூறியுள்ளார்.

எனினும் விவசாய அமைச்சின் செயலாளர் ரோஹன புஷ்பகுமாரவின் தகவல்படி, அரசாங்கம் தலையிட்டு விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

இந்தநிலையில் குறைந்த பட்சம் 20,000 மெட்ரிக் தொன் நெல்லை கொள்முதல் செய்யாவிட்டால், அரிசி விலையை கட்டுப்படுத்துவது கடினம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (4-7)

## கடன் வழங்குநர்...

போர்ட் சான்ஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான தெளிவூட்டல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இணைய வழியாக நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சீனா, இந்தியா, ஜப்பான், அமெரிக்கா, ஆசிய அபிவிருத்தி வங்கி உட்பட்ட பல நாடுகளிடம் இலங்கை கடனைப் பெற்றுள்ளது.

அத்தோடு இறையாண்மை பத்திரங்களிலும் கடன்களை பெற்றுள்ள நிலையில் சுமார் 50 பில்லியன் டொலர்களை இலங்கை செலுத்த வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## பனை மரங்க...

சூழ பனை மரங்கள் காணப்பட்டன. அவற்றுக்கு விசமிகள் தீ வைத்துள்ளனர்.

பனை மரங்கள் திடீரென தீ பற்றி எரிவதனை அவதானித்த அயலவர்கள் உடனடியாக தீயணைப்பு பிரிவினருக்கு அறிவித்தமையை அடுத்து அவ்விடத்திற்கு விரைந்த தீயணைப்பு பிரிவினர் தீயினை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தீயணைப்பு படையினர் விரைந்து செயற்பட்டமையினால் தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது எனவும் அதனால் அயலில் இருந்த தென்னம் தோட்டம் மற்றும் மேலும் பல பனை மரங்கள் தீயினால் அழிவடைந்திருக்கும் என அப்பகுதி வாசிகள் தெரிவித்தனர்.

குறித்த தீயினால் 20 பனை மரங்கள் எரிந்து கருகியுள்ளன. சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டமையை அடுத்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (4-7,33,104)

## மகாராணிக்கு...

யோர், மறைந்த இரண்டாம் எலிசபெத் மகாராணிக்கு, வெஸ்மினிஸ்டர் மண்டபத்தில் நேற்று அஞ்சலி செலுத்தினர்.

மகாராணியின் இறுதிச் சடங்கு, இலங்கை நேரப்படி, இன்று பிற்பகல் 3.30 மணிக்கு வெஸ்மினிஸ்டர் அபேயில் இடம்பெறவுள்ளது. (4-7)

## வவுனியா மாமடு...

யில் நேற்று மாலை 5.00 மணியளவில் ஏற்பட்ட தீப்பரவல் பலமணிநேர போராட்டத்திற்கு மத்தியில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

மாமடு சூரிய மின் உற்பத்தி நிலையத்திற்கு அருகேயுள்ள காட்டுப்பகுதியில் திடீரென தீப்பரவல் ஏற்பட்டுள்ளது அதனையடுத்து சூரிய மின் உற்பத்தி நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்கள் நகர சபை தீயணைப்பு பிரிவினர் மற்றும் பொலிஸாருக்கும் தகவல் வழங்கியமையையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த குழுவினர் பல மணிநேர போராட்டத்திற்கு மத்தியில் தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தீ விபத்து திட்டமிட்டவகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதா அல்லது காற்றின் காரணமாக ஏற்பட்டுள்ளதா போன்ற பல்வேறு கோணத்தில் மாமடு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-7)

## புதிய...

ங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, ஓகஸ்ட் மாதத்தில் விதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான இறக்குமதி பொருட்கள் மீதான தற்காலிகத் தடை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கடந்த புதன்கிழமை நீக்கப்பட்டது.

ஏற்கனவே ஜூலை 9 முதல், மலசலக் கூட துடைப்பி, கட்டுமான பொருட்கள், இயந்திர பாகங்கள் மற்றும் தொழில் துறை பொருட்கள் உள்ளிட்ட 159 பொருட்களுக்கான தடை நீக்கப்பட்டது.

இதேவேளை ஓகஸ்ட் 23 முதல் இறக்குமதி செய்யப்பட்ட 300 இற்கும் மேற்பட்ட பொருட்களுக்கான தடையும் நீக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக மூன்று வாரங்களாக இருந்த இறக்குமதி தடையால் உணவக உரிமையாளர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

உள்ளூர் விருந்தோம்பல் துறையானது சர்வதேச சுற்றுலாத் தளங்கள் மற்றும் உணவகங்களுடன் போட்டியிடும் நிலையில் இந்த அதிருப்தி வெளியிடப்பட்டிருந்தது.

இதேவேளை வங்கிகளின் நாணயக் கடிதங்கள் படிப்படியாக இயல்படைந்து வருவதால், பொருட்களின் வர்த்தகர்கள் மற்றும் மொத்த இறக்குமதியாளர்களால் தங்கள் கொள்கலன்களை விரைவாக துறைமுகத்தில் இருந்து விடுவிக்க முடிகின்றது என புறக்கோட்டை வர்த்தகர்கள் சங்கத் தலைவர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார். (4-7)

## இலங்கை...

உரையாற்றவுள்ளார்.

மேலும் இலங்கைக்கு எதிராக பல நாடுகள் ஏற்கனவே கருத்துக்களை முன் வைத்துள்ளதோடு ஐக்கிய நாடுகளின் 77 ஆவது அமர்வு செப்டம்பர் 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## அரசிற்கு...

டத்தின் தொடர்ச்சியாக, தொடர்ந்தும் 118 வது நாளாக ஒன்று கூடி தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் "பேச்சுச் சுதந்திரம்", "அனைவருக்கும் சமமான சட்டம்",அடக்குமுறைகள் உள்ளிட்ட விடயங்களை வலியுறுத்தி குறித்த போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (4-7)

### மஹஜன சம்பத

திகதி 2022/09/18
சீட்டிழுப்பு இலக்கம் 4882
X 5 5 9 7 6 4

### ஹந்தஹன (HANDAHANA)

சீட்டிழுப்பு திகதி 2022.09.18
சீட்டிழுப்பு இலக்கம் 191
கன்னி 03 28 35 41 கன்னி

### மெகா பவர்

திகதி 18/09/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1230
L 20 30 31 52 73

### கொவிசெத

திகதி 2022.09.18
சீட்டிழுப்பு இலக்கம் 3124
C 48 65 66 78

### தன நிதானய

திகதி - 2022.09.18
சீட்டிழுப்பு இலக்கம் - 912
E 0 6 76 77

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 18/09/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1337
மகரம் 5 3 2 0 9 9

### அத கோடிபதி (ADA KOTIPATHI)

ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1683
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2022.09.18
ரூ. 4,134,360/-
05 17 24 45 O

### சனிதா

ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.09.18
சீட்டிழுப்பு இல: 4018
வர்ணம்: இளஞ்சிவப்பு
ரூ. 2,840,280/-
01 16 19 37 Y

### சசிரி

சீட்டிழுப்பு இல 224
சீட்டிழுப்பு திகதி 2022.09.18
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 02 37 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,749,680/-

### ராசி

சுப்பர் ஜக்பொட் ரூ. 4,828,527.80
திகதி 2022-09-18
வெற்றி வாரம் 3569
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 11 16 23 34
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 6,643,800/-

### 26 வசனா

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Z 03 02 11 20 56
சீட்டிழுப்பு வாரம் 1033
வர்ணம் மஞ்சள்
திகதி 2022.09.18 ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 261,612,577/-
தொலை பேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1857
வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.09.18
தினம் ஞாயிற்றுக்கிழமை
M 02 45 58 72
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,178,280/-

7 இல் செவ்வாய் உள்ள மணமகளைத் தேடுகின்றோம்

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1984 இல் பிறந்த அரச பணியாற்றும் மணமகனுக்கு 7 இல் செவ்வாய் உள்ள மணமகள் தேவை.

Whatsapp
+41779035675

என்ற இலக்கத்திற்கு SMS மூலம் தொடர்புகொள்ளவும் சாதகப் பிரதியையும் SMS இல் அனுப்பவும்.

(C-4941)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவின் அளவு அதிகரிக்கப்பட வேண்டும்

## சுகாதார அமைச்சர்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவின் அளவை அதிகரிக்க வேண்டும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டுக்கான உலக நோயாளர் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டப வளாகத்தில் நடைபெற்ற தேசிய நிகழ்வில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே சுகாதார அமைச்சர் இதனை தெரிவித்தார்.

மருந்துகளினால் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் சந்தர்ப்பங்கள் உண்டு. மருந்துகளின் சரியான பாவனையில் விசேட கவனம் செலுத்தி இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

மருந்துகளின் பாதுகாப்பை நடைமுறைப்படுத்துவதற்கான கொள்கைத் திட்டங்களை தயாரிப்பதே இந்நாளின் முக்கிய நோக்கமாகும்.

இப் பிரச்சினை பல வருடங்களாக இருந்து வருகிறது. ஜனாதிபதியின் அமைச்சரவை எம்.பிக்கள், சுகாதாரத்துறை என அனைவரும் இதற்கு முன்னுரிமை அளித்து உயிர்களுக்கு



பாதிப்பு ஏற்படாத இடத்திற்கு கொண்டு செல்ல முயற்சிக்கிறோம்.

நாட்டில் உணவு, பானங்களின் பிரச்சினைக்கு யாரையும் குறை சொல்லாமல் மீண்டு வர முயற்சிக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (4)

# இராஜாங்க அமைச்சர்களுக்கு பதில் அமைச்சுப் பொறுப்புகள்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டில் இருந்து வெளியேறியுள்ள காலப்பகுதியில், அவருக்கு கீழ் உள்ள அமைச்சுக்களின் இராஜாங்க அமைச்சர்களுக்கு பதில் அமைச்சுப் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிக்கையொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளது.

இதன்படி, பதில் பாதுகாப்பு அமைச்சராக பிரமித பண்டார தென்னகோனும் நிதி, பொருளாதார, ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகளின் பதில் அமைச்சராக ரஞ்சித் சியம்பலாபிட்டியவும் பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் பதில் அமைச்சராக கீதா குமாரசிங்கவும், தொழில்நுட்ப பதில் அமைச்சராக கனக ஹேரத் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பதில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக திலும் அமுனுகம நியமிக்கப்பட்டுள்ளார். (4)

## தாமரைக் கோபுரம்

# மூன்று நாட்களில் 7.5 மில்.வருமானம்

(கொழும்பு)

கொழும்பில் உள்ள தாமரைக் கோபுரம் திறந்து வைக்கப்பட்ட மூன்று நாட்களில் மொத்தமாக 7.5 மில்லியன் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது.

இந்த மூன்று நாட்களில் சுமார் 14,000 பேர் கோபுரத்தை பார்வையிட்டுள்ளதாக கொழும்பு தாமரைக் கோபுர நிறுவனத்தின் பிரதம நிர்வாக அதிகாரி ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

தாமரைக் கோபுரத்தை மக்கள் பார்வையிடுவதற்கு வழங்கப்பட்ட கால அவகாசமும் நேற்று முன்தினம் சனிக்கிழமை முதல் நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மதியம் 12:00 மணி முதல் இரவு 11:00 மணி வரை மக்கள் பார்வையிடலாம்.

எவ்வாறாயினும், இரவு 10 மணி வரை மட்டுமே அனுமதி சீட்டுகள் வழங்கப்படும் என ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க மேலும் தெரிவித்தார். (4)

# பேர்ள் கப்பல் இழப்பீட்டை கண்காணிக்குமாறு பரிந்துரை

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் தீப்பிடித்து எரிந்த எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் ஏற்பட்ட சேதத்திற்கான இழப்பீட்டுத் தொகையை மீளப் பெறுவதை கண்காணிக்குமாறு கணக்காய்வாளர் நாயகம் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

கப்பலின் சேத மதிப்பீடு மற்றும் நட்டஈட்டை மீளப்பெறும் நடவடிக்கை தொடர்பில் பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்பட்ட உண்மைகளை கருத்திற்கொண்டு நட்டஈட்டை மீளப் பெறும் நடவடிக்கையை கண்காணிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டது.

கப்பலினால் ஏற்பட்ட சேதத்திற்கான நட்டஈட்டை மீளப்பெறும் நடவடிக்கை தொடர்பில் பூரண விசாரணை நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக கணக்காய்வாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் இலங்கைக் கடலில் மூழ்கிய போது கப்பலில் 81 கன்டெய்னர்களில் ஆபத்தான பொருட்கள் இருந்ததாகவும் அதில் 25 தொன் நைட்ரிக் அமிலம் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபர் கைது

## 3 வாள்களும் மீட்பு

(அராலி)

யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் படி, நேற்று யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆறுகால் மடம் - ஆனைக்கோட்டை பகுதியில் நீண்ட



காலமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 38 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு அவரிடமிருந்து 50லீற்றர் கோடா, 8 லிற்றர் கசிப்பு, 3 வாள்களும் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது அவரிடம் இருந்து கசிப்பு உற்பத்தி செய்ய பயன்படுத்தப்படும் மூலப் பொருட்கள் மற்றும் கசிப்பு உற்பத்தி செய்ய பயன்படுத்தும் உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட நபர் விசாரணைகளின் பின் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட உள்ளார். (4-104)

# இராசிபலன்

19.09.2022
புரட்டாதி 02, திங்கட்கிழமை
நவமி முன்னிரவு 8.07 மணிவரை
திருவாதிரை முன்னிரவு 8.04 மணிவரை
சுபநேரம் 12.03-1.33 மணிவரை
இராகுகாலம் 7.33-9.03 மணிவரை
சந்திராஷ்டமம் - அனுசம், கேட்டை

வளவன்



**மேஷம்**

செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.



**ரிஷபம்**

ஆடம்பரப் பொருட்களை வாங்க முற்படுவீர்கள், பொதுவாழ்வில் புகழ் கூடும், நிதி நிலை உயரும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.



**மிதுனம்**

இல்லறத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும் நாள், குடும்பச்செலவுகளில் சிக்கனம காட்ட முற்படுவீர்கள், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.



**கடகம்**

எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாடு காரிய வெற்றி தரும், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது.



**சிம்மம்**

குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.



**கன்னி**

அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், கனவு பலிதமுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.



**துலாம்**

பொருளாதார நிலை உயர என்ன வழி என்று யோசிப்பீர்கள், ஆன்றோர்களின் சந்திப்புக்கள் இடமபெறலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, தடைகள் விலகும் நாள்.



**விருச்சிகம்**

வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வரவும் செலவும் சமமாகும் நாள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், முயற்சிகளில் சிறு தாமதங்கள் ஏற்படலாம்.



**தனுசு**

குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



**மகரம்**

உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், சுவாரஷ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.



**கும்பம்**

வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம்.



**மீனம்**

செய்தொழிலில் உற்சாகம் காட்டுவீர்கள், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், காரிய அனுகூல முண்டு.

**அவநம்பிக்கையின் உச்ச கட்டம் தான் தற்கொலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

### கீர்த்தி சிம்மன் கதை

(நேற்றைய தொடர்ச்சி)

மன்னனும் 'சரி அதையும் பார்த்து விடலாம்' என்றான். அன்று இரவு சாப்பிட்டு விட்டு மன்னனும் கீர்த்தி சிம்மனும் ஜெயசேனனின் வீட்டை அடைந்தார்கள்.

ஜெயசேனனும் 'நீங்கள் இன்றிரவு இங்கு வருவீர்கள் என்று என் மகள் முன்பே கூறி விட்டாள்' என்றான்.

அது கேட்டு மன்னனும் கீர்த்தி சிம்மனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். யாவரும் அமர்ந்த பின் மன்னன் 'ஜெயசேனா! உன் வீட்டில் பழங்கால சரஸ்வதி பொம்மை ஏதாவது இருக்கிறதா என்று கீர்த்தி சிம்மன் கேட்கிறான்' என்றான்.

ஜெயசேனனும் 'ஓகோ! இதே கேள்வியை தான் வந்ததும் சத்திசேனை கேட்டாள். நானும் வீட்டிலிருந்த பழைய சரஸ்வதிதேவியின் தந்த பொம்மையை எடுத்துக் கொடுத்தேன். அதை அவள் தன் அறைக்குள் எடுத்து சென்று பார்த்து விட்டு என்னிடமே திருப்பிக் கொடுத்து விட்டாள்' என்றான்.

கீர்த்தி சிம்மனும் 'சத்திசேனை அந்த பொம்மையை பார்த்தாளா?' எனக் கேட்கவே ஜெயசேனனும்



'ஆமாம். வெகுநேரம் வரை பார்த்து விட்டே என்னிடம் தந்தாள். அந்த பழைய பொம்மையில் அப்படி என்ன அதிசயம் இருக்கிறதோ?' என்றான். கீர்த்தி சிம்மனும் அதிசயம் அதிலிருந்தது ஆனால் இப்போது அதில் இல்லை' என்றான்.

அப்போது சத்திசேனை வந்து ஒரு அழகிய தந்தச் சிமிலை அவர்களின் முன் வைத்து விட்டு ஒரு புறமாக நின்றாள். கீர்த்தி சிம்மனும் அதை எடுத்து தன் தந்தையிடம் கொடுத்து 'இது தான் அந்த அதிசயம்' என்றான்.


சுசேன மன்னன் அந்த சிமிலை வாங்கி அதன் மூடியைத் திறந்து பார்த்தான். அதில் கண்ணைப் பறிக்கும் முத்துமாலை இருந்தது. உடனே அவன் சக்தி சேனையிடம் 'இது எங்கிருந்து உனக்கு கிடைத்ததம்மா?' என்று கேட்டான்.

சக்திசேனையும் 'எங்கள் வீட்டு சரஸ்வதி பொம்மைக்குள் இருந்து தான் கிடைத்தது. நாங்கள் தேவியின் ஆலயத்தில் ஒரு வெள்ளித் தகட்டை கண்டு எடுத்தோம். அதில் எழுதியிருந்ததை புரிந்து கொண்டேன். படைப்பு என்றால் இந்த முத்து மாலை. படைத்தவன் வீடு என்றால் எங்கள் வீடு. படைத்தவனின் பாதிப் பாகம் என்றால் பிரம்மாவின் மனைவியான சரஸ்வதி.

(தொடரும்)

# சிலப்பதிகாரம்

## விதியின் சமிக்ஞை



மதுரையில் இருக்கும் ஒவ்வொரு விநாடியையும் கண்ணகி உளப்பூர்வமாக ரசித்தாள். செல்வச் செழிப்பில் திக்குமுக்காடிய போது கூட அவள் இத்தனை சந்தோசமாக இருந்தது இல்லை. மனதிற்குள் இனம்புரியாத உற்சாகம் கரைபுரண்டோடியது.

கண்ணகி சமையலை முடித்தாள். இடத்தை சுத்தம் செய்தாள். கோவலன் உட்கார்வதற்கு ஓர் ஒலைப்பாயைப் போட்டாள். நல்ல குருத்து [illegible]ழை இலையை வி[illegible]. இதில் நீர் [illegible] சுத்தம் செய்தாள். சமைத்த உணவை அன்போடு பரிமாறினாள். பல நாட்களாக நடந்த களைப்பு ஒரு பக்கம், வெறும் காய்கனிகளை தின்று ஏமாற்றத்தில் இருந்த நாக்கு

இன்னொரு பக்கம்... கோவலன் ஆர்வத்துடன் சுவைத்துச் சாப்பிட்டான். அவன் சாப்பிடுவதைப் பார்த்த கண்ணகிக்கு மனம் நிறைவாக இருந்தது. மாளிகையில் செல்வச் செழிப்பில் வாழ்ந்த வாழ்க்கையை விட

அந்த நிமிடம் விபரிக்க முடியாத அளவுக்கு சந்தோசமாக இருந்தது. இந்த சந்தோசமான தருணத்தை ஜயையும் அக்கம் பக்கத்து பெண்களும் பிரியத்தோடு பார்த்தார்கள். கண்ணனுக்கு நப்பின்னை பரிமாறுவது

போல் இருப்பதாக புகழ்ந்தார்கள்.

சாப்பிட்டு முடித்த கோவலனுக்கு கண்ணகி வெற்றிலை மடித்துக் கொடுத்தாள். ஏழ்மையில் பிரியம் தான் முன்னுரிமை பெற்று இருக்கும். 'கண்ணகி...' என்று அன்பாக அழைத்த கோவலனின் குரல் தழுதழுத்தது. அவளை அருகில் அழைத்து அவளுடைய தோளை அணைத்துக் கொண்டான்.

உன்னுடைய பட்டுப் பாதங்கள் கல்லிலும் முள்ளிலும் நடந்து பட்ட கஷ்டத்தை நினைத்து என் தாய் தகப்பனின் மனம் எவ்வளவு வேதனைப்பட்டதோ. நான் ஒரு முட்டாள். பயனில்லாமல் பேசித் திரிகிறவர்களோடு அலைந்தேன். உன்னை மறந்து வேறொரு பெண்ணுடன் உறவாடினேன்.

பெரியவர்கள் சொன்ன ஒழுக்க நெறிகளை எல்லாம் மீறினேன். நல்ல அழகும் பண்பும் நிறைந்த உனக்கு துன்பத்தைக் கொடுத்தேன் எனக்கு மன்னிப்பே கிடையாது.

ஆனால் இவ்வளவுக்கும் பிறகு 'புறப்படு மதுரைக்கு' என்று நான் சொன்ன போது மறு வார்த்தை பேசாமல் என்னோடு கிளம்பினாய். அத்தனை கஷ்டங்களையும் பொறுத்துக் கொண்டு என்னோடு வெய்யிலில் கரடு முரடான பாதையில் நடந்தாய். கோவலன் இப்படி புலம்ப கண்ணகி அவனுக்கு பொறுமையாகப் பதில் சொன்னாள், 'நீங்கள் என்னை பிரிந்து இருந்த போது கூட நான் கஷ்டத்தில் இருப்பதாக என்றைக்குமே உங்கள் பெற்றோரிடம் காட்டிக் கொண்டதில்லை. அப்படிக் காட்டிக் கொண்டால் அவர்கள் வேதனைப்படுவார்கள் என்று எனக்குத் தெரியும்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 79

**சமாந்தர வாக்களிப்பு முறை பயன்படுத்தப்பட்டதால், இட ஒதுக்கீடு விகிதாசாரமாக இருக்கவில்லை. எடுத்துக்காட்டாக, கட்சி பட்டியல் வாக்களிப்பில் (22.12%) வெற்றி பெற்ற மக்கள் முன்னணி 82 இடங்களுடன் இரண்டாவது இடத்தைப் பெற்றது. பெட்ரோ போரோஷென்கோ கூட்டணி 21.82% வாக்குகளுடன் 123 இடங்களைப் பெற்றது.**

கிரிமியா மற்றும் செவஸ்டோபோல் நகரில் 1.8 மில்லியன், தோனேஸ்க் மாநிலத்தில் 1.6 மில்லியன் மற்றும் லுகான்ஸ்க் மாநிலத்தில் 1.2 மில்லியன் வாக்காளர் வாக்களிக்கவில்லை. இதன் காரணமாக, 8 ஆவது பாராளுமன்றத்தில் (வெர்கோவ்னா ராடாவில்) உள்ள 450 இடங்களில் 27 இடங்கள் நிரப்பப்படாமல் இருந்தன.

225 தேர்தல் மாவட்டங்களில் சுமார் 3,321 வேட்பாளர்கள் கலந்து கொண்டனர் அவர்களில் 2,018 பேர் சுயேட்சை வேட்பாளர்கள். 52 அரசியல் கட்சிகள் தமது வேட்பாளர்களை பரிந்துரை செய்தன. ஒக்டோபர் 1 இல் வேட்பாளர் பதிவு காலக் கெடுவுக்குப் பிறகு 147 வேட்பாளர்கள் தமது வேட்புமனுக்களை வாபஸ் பெற்றனர்.

தேர்தல் பிரச்சாரத்தில் கட்சிகள் வெளிநாட்டு உறவுகள் மற்றும் டான்பாஸில் போர் பற்றிய நிலைப்பாடுகளை பொதுவாக இரண்டு குழுக்களாக பிரிக்கலாம். பல கட்சிகள் படையைப் பயன்படுத்தி டான்பாஸில் போரை முடிக்க விரும்பினார். வேறுபல கட்சிகள் அமைதியான தீர்வு மூலம் டான்பாஸில் போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று வாதிட்டனர்.

**தேர்தல் பிரச்சாரத்தில் கட்சிகள் இரண்டு குழுக்களாக பிரிந்திருந்தனர். பல கட்சிகள் படையைப் பயன்படுத்தி டான்பாஸில் போரை முடிக்க விரும்பினர். வேறுபல கட்சிகள் அமைதியான தீர்வு மூலம் டான்பாஸில் போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று வாதிட்டனர்.**

வாக்குகள் எண்ணுவதில் கணிசமாக தாமதம் ஏற்பட்டது. அனைத்து வாக்குகளும் நவம்பர் 10 அன்று மட்டுமே எண்ணப்படும் என்று மத்திய தேர்தல் ஆணையம் அறிவித்தது. 38 ஆவது தேர்தல் மாவட்டத்திற்கான இறுதி முடிவு அறிவிக்கப்படுவது நீதிமன்றத்தில் சவால் செய்யப்பட்டதால் நவம்பர் நடுப்பகுதி வரை தாமதமானது.

2014 தேர்தலில் பங்கேற்ற வாக்காளர்களின் எண்ணிக்கை 2012 ஐ விட மிகக்குறைவாக இருந்தது (20,797,206 இல் இருந்து 16,052,228 ஆக குறைவடைந்தது). சில பிராந்தியங்களில் வாக்களிப்பை ஒழுங்கமைக்க இயலாமையே இந்த வீழ்ச்சிக்கு முக்கிய காரணம். வாக்குப்பதிவு முறை வெளிப்படையான புவியியல் வேறுபாடுகளைக் கொண்டிருந்தது.

இது நாட்டிலேயே மிகக் குறைந்த வீதமாகும். முன்னைய காலங்களில் டான்பாஸ் பகுதி ஒவ்வொரு தேர்தலுக்கும் அதிக வாக்குப்பதிவைக் காட்டியது குறிப்பிடத்தக்கதாகும்.

**மேற்கு மாநிலங்களில் அதிக வாக்குப்பதிவு (60-70%) பதிவாகியது. மத்திய பிராந்தியங்களில் சராசரியாக (54-58%) வாக்குப்பதிவு இருந்தது மற்றும் தெற்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களில் இது மிகவும் குறைவாக இருந்தது (40-48%). டான்பாஸின் இரண்டு மாநிலங்களில் வாக்குர்பதிவு 32% ஆகும். இது நாட்டிலேயே மிகக் குறைந்த வீதமாகும்.**

இத் தேர்தலில் வாக்களிக்க 30,921,218 பேர் தகுதி பெற்றிருந்தனர். அதில் 16,052,228 பேர் வாக்களித்தனர். செல்லுபடியற்ற வாக்குகள் 298,402 ஆகும். வாக்களிப்பு வீதம் 51.91% ஆகும்.

இந்தத் தேர்தலை மறுசீரமைப்பு என்று சொல்லலாம். 2010-2014 வரை ஆட்சி செய்து, 2006 முதல் தேர்தல்களில் முதல் இரண்டு இடங்களில் ஒன்றைப் பிடித்த பிராந்தியங்களின் கட்சி இந்தத் தேர்தலில் பங்கேற்கவில்லை, அதேநேரத்தில் பிராந்தியங்களின் கட்சியின் முறைசாரா வாரிசான எதிர்க் கட்சிக் கூட்டணி 9.43% வாக்குகளுடன் ஒரு சாதாரண முடிவை மட்டுமே காட்டியது.

எதிர்க்கட்சிக் கூட்டணி இத் தேர்தலில் கட்சி முக்கியமாக டினிப்ரோபெட்ரோவ்ஸ்க், தோனேஸ்க், சபோரிஷியா, லுகான்ஸ்க் மற்றும் கார்கிவ் பகுதிகளில் 29 இடங்களை வென்றது. அமெரிக்க பரப்புரையாளர் பால் மனஃபோர்ட் கட்சியின் அரசியல் ஆலோசகராக செயற்பட்டார்.

உக்ரைன் சுதந்திரத்திற்குப் பிறகு முதன்முறையாக, உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சிக்கு இத் தேர்தலில் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை. புதிதாக உருவாக்கப்பட்ட நான்கு கட்சிகள் இந்தத் தேர்தலில் அதிக ஆதரவைப் பெற்றன. பெட்ரோ போரோஷென்கோ கூட்டணி (ஜூலை 2014 இல் போரோஷென்கோவின் ஆதரவாளர்களால் உருவாக்கப்பட்டது). மக்கள் முன்னணி (ஓகஸ்ட் 2014 இல் தாய்நாடு கட்சியில் இருந்து பிரிந்து உருவானது), சுயசார்புக் கட்சி (2012 இல் பதிவு செய்யப்பட்டது) மற்றும் எதிர்க்கட்சிக் கூட்டணி (2014 செப்டெம்பரில் முன்னாள் பிராந்தியங்களின் கட்சி உறுப்பினர்களின் குழுவால் உருவாக்கப்பட்டது).

(தொடரும்)

# தென்னாபிரிக்காவில் விபத்து 21 பேர் உடல் நசுங்கி பலி

(கேப்)

தென்னாபிரிக்காவில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து மற்றும் லொறி மோதி கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற கோர விபத்தில் 12 வயதுக்குட்பட்ட 19 சிறுவர்கள் உட்பட 21 பேர் உயிரிழந்துள்ளனர்.

தென்னாபிரிக்காவின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள குவாசுலு-நடால் மாகாணத்தின் பொங்கோலா நகரில் தனியார் பாடசாலை மாணவர்களை பாடசாலை முடிந்து ஏற்றிச் சென்ற பேருந்தே விபத்தில் சிக்கியது.

வீதியில் பேருந்து சென்று கொண்டிருந்த போது எதிர் திசையில் அதிவேகத்தில் வந்த லொறி ஒன்று பாடசாலை பேருந்துடன் நேருக்கு நேர் மோதியது. இதில் பேருந்து மோசமாகச் சிதைந்து அதில் இருந்த 21 பேரும் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தனர். (4)

# அமெரிக்காவில் அறிமுகமாகிறது பறக்கும் மோட்டார் சைக்கிள்



(வோஷிங்டன்)

எரிபொருள் தேவையை மிச்சப்படுத்தும் வகையில் சூரிய சக்தி, மின்சக்தியில் ஓடும் வாகனங்கள், விபத்துக்களை தடுக்கும் வகையில் அதிநவீன சென்சார்கள், கமராக்களை கொண்ட தானியங்கி வாகனங்கள் ஆகியவை அறிமுகம் செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், தற்போது எதிர்கால தொழில்நுட்பமாக உலகின் முதல் பறக்கும் மோட்டார் சைக்கிள் என்ற வாகனம் அறிமுகமாகியுள்ளது. டெட்ராய்டில் நடைபெற்ற வாகன கண்காட்சியில் பைக் காட்சிப்படுத்தப்பட்டது.

ஜப்பானைச் சேர்ந்த ஏர்வின்ஸ் நிறுவனம் இதனை உருவாக்கி உள்ளது.

டிரோன் போன்ற வடிவமைப்பிலான பறக்கும் தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்டுள்ள இந்த மோட்டார் சைக்கிள் தொடர்ந்து 40 நிமிடங்கள் வரை பறக்கும் திறன் கொண்டது.

இந்திய மதிப்பில் இதன் விலை சுமார் ரூ. 6 கோடி என தெரிவிக்கப்பட்டது. (4)

# நேபாளத்தில் நிலச்சரிவு 17 பேர் பலி-பலரை காணவில்லை



(காத்மண்டு)

மேற்கு நேபாளத்தில் நிலச்சரிவு காரணமாக அச்சாம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வசித்து வந்த சுமார் 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, குறித்த நிலச்சரிவில் சிக்கி சுமார் 20 பேர் வரை காணாமல் போயுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனை அடுத்து, உடனடியாக தேடுதல் மற்றும் மீட்பு பணிக்காக ஹெலிகொப்டர்களை அனுப்ப அந்நாட்டு உள்துறை அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

இதன் காரணமாக காணாமல் போனவர்களில் இதுவரை 10 பேர் மீட்கப்பட்டுள்ளனர். மேலும் 10 பேரைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் மீட்புப் பணியாளர்கள் தொடர்ந்து ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# தாய்வானில் நிலநடுக்கம்

(தைபே)

தாய்வானின் கிழக்கு கடற்கரையில் நேற்று முன்தினம் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. கடலோர நகரமான டைட்டங்கிற்கு வடக்கே 50 கிலோ மீற்றர் தொலைவில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது. இது ரிக்டர் அளவுகோலில் 6.6 அலகாக பதிவாகியுள்ளது. தாய்வானைப் பொறுத்தவரை நிலநடுக்கம் ரிக்டர் அளவு கோலில் 7.0 ஆக இருந்தால் மட்டுமே சுனாமி எச்சரிக்கை வெளியிடும். எனவே, குறித்த நிலநடுக்கம் 6.6 என கடுமையானதாக இருந்த போதிலும் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதற்கும் அஞ்ச வேண்டாம் போராட்டத்தில் ஈடுபடுங்கள்

## அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களிடம் சரத்பொன்சேகா தெரிவிப்பு

**(கொழும்பு)**

**பொலிஸ்,இராணுவம் உள்ளிட்ட பாதுகாப்பு தரப்பினரில் பெரும்பான்மையானோர் போராட்டகாரர்களுக்கு சார்பாகவே உள்ளார்கள். தற்போதைய அரசியல் அடக்குமுறைகள் அனைத்தும் இவ்விரு வருடத்திற்குள் நிறைவு பெறும். ஆகவே எதற்கும் அஞ்ச வேண்டாம். ஜனநாயக ரீதியில் போராட்டத்தில் ஈடுபடுங்கள். நாங்கள் உங்களுடன் உள்ளோம் என பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா அனைத்து பல்கலைக்கழக மாணவர்களிடம் தெரிவித்தார்.**

கொழும்பில் இடம்பெற்ற அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரது கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டரர்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது, நாட்டு மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை தற்போதைய பாராளுமன்றத்தின் ஊடாக செயற்படுத்த முடியாது. நாட்டுக்கான சிறந்த கொள்கை மற்றும் இலக்கினை உடையவர்கள் தற்போதைய பாராளுமன்றத்தில் இல்லை.

போராட்டம் முடிவடையவில்லை. பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ள மக்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபடுவார்கள்.மக்கள் போராட்டத்திற்கு சகல தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும். போராட்டத்தின் ஊடாகவே சிறந்த தீர்வைப் பெற முடியும்.



பொலிஸாரில் நூற்றுக்கு 98 சதவீதமானோர் போராட்டம் பக்கம் உள்ளார்கள். இலாப நோக்கத்துடன் செயற்படும் ஒருசிலரின் அதிகாரம் இன்னும் இரண்டு வருட காலம் தான் செல்வாக்குச் செலுத்தும்.

இராணுவத்தினரும் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவார்கள். இன்னும் இரண்டு வருடத்திற்குள் அனைத்து விளையாட்டையும் அரசாங்கம் விளையாடிக் கொள்ளட்டும் எதற்கும் அஞ்ச வேண்டாம், போராட்டத்தில் ஈடுபடுங்கள் உங்களுடன் நாம் உள்ளோம் என தெரிவித்தார். (4)

# நிதி அபராதங்களை விதிக்க மத்திய வங்கி நடவடிக்கை

(கொழும்பு)

நிதி நிறுவனங்களின் நிலையியல் தன்மையை நடைமுறைப்படுத்துவதற்காக நிதிப்புலனாய்வு பிரிவினால் நிதி அபராதங்களை விதிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

2006 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க நிதி பரிவர்த்தனை அறிக்கையிடல் சட்டத்தின் படி குறித்த அபராதங்கள் விதிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அபராத தொகையை தீர்மானிக்கும் போது, சட்டத்தை மீறி செயற்பட்ட தன்மை மற்றும் அதன் துரிதத் தன்மை கருத்தில் கொள்ளப்படும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (4)

# அரிசியில் விஷம்? மறுக்கும் அதிகாரிகள்

(கொழும்பு)

விஷம் கலந்த அரிசி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக கூறப்படும் குற்றச்சாட்டை பூச்சிக்கொல்லி பதிவாளர் அலுவலகம் நிராகரித்துள்ளது. விஷம் கலந்த அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகள் முற்றிலும் பொய்யானது என்றும் அந்த அலுவலகம் கூறியுள்ளது.

அவ்வாறு வெளியான செய்தியில் எவ்வித ஆதாரமும் இல்லை என பூச்சிக்கொல்லிகள் தொடர்பான பதில் பதிவாளர் லசந்த ரத்னவீர குறிப்பிட்டுள்ளார். (4)

# அமைச்சுப்பதவிகள் பெற்றவர்களின் உறுப்புரிமைகள் இரத்து

## சுதந்திரக்கட்சி தீர்மானம்

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்தில் அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுக்களை பெற்ற சுதந்திரக்கட்சியின் பிரதிநிதிகளின் கட்சி உறுப்புரிமையை இரத்து செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உப தவிசாளர்களான நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மகிந்த அமரவீர ஆகியோர் தற்போதைய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை பெற்றுள்ளனர்.

அத்துடன் கட்சியின் பொருளாளர் லசந்த அழகியவண்ண அண்மையில் இராஜாங்க அமைச்சர் பதவியை பெற்றுக் கொண்டார்.

அவருக்கு மேலதிகமாக சுதந்திரக் கட்சியின் உப செயலாளர் ஜகத் புஸ்பகுமார மற்றும் சாமர சம்பத் தஸநாயக்க ஆகியோருக்கும் இராஜாங்க அமைச்சு பதவிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# ஜனாதிபதி ரணிலின் திட்டத்தை பகிரங்கப்படுத்திய வஜிர

(கொழும்பு)

அடுத்த 25 ஆண்டுகளுக்கு மாற்ற முடியாத தேசிய கொள்கை கட்டமைப்பை உருவாக்குவதே ஜனாதிபதி ரணிலின் திட்டம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் தவிசாளருமான வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக கடமைகளை பொறுப்பேற்ற பின்னர், அவர் தனது கொள்கை அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியலமைப்பின் 27 ஆவது சரத்தின்படி 2048 ஆம் ஆண்டுக்குள் இளைய தலைமுறையினருக்கு நன்மைகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் தேசியக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவது வலுப்படுத்தப்பட்டுளது.

எதிர்வரும் 25 ஆண்டுகளுக்கு மாற்ற முடியாத தேசிய கொள்கை கட்டமைப்பை உருவாக்குவதே நோக்கமாகும்.

இந்த இலக்கை நனவாக்க அனைவரின் உதவியும் தேவை. அரசியல் அடிப்படையில் சில குழுக்கள் பிளவுபட்டால், அந்தப் பணியை எப்படி நிறைவேற்றுவது என்பதை முதலில் சொல்ல வேண்டும்.

இந்தச் சவாலில் வெற்றி பெற ஒற்றுமையே மிக முக்கியமானது என குறிப்பிட்டுள்ளார். (4)


**வேலணை பிரதேச சபை**

**பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்**

வேலணை பிரதேச சபையினால் பிடிக்கப்பட்டு உரிமை கோரப்படாத நாம்பன் கட்டாக்காலி கால்நடையொன்று பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இடம் :- வேலணை பிரதேச சபை தலைமை அலுவலகம்.

காலம் :- 20.09.2022 செவ்வாய்க்கிழமை மு.ப 11.30 மணி

- ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புவோர் குறித்த இடத்தில் உரிய கட்டணத்தைச் செலுத்தி ஏலத்தில் பங்கு கொள்ளலாம்.
- பகிரங்க ஏலத்தில் சித்தியடைவோர் உடனடியாக பணத்தினைச் செலுத்தி உரிய பட்டியிலிருந்து உரிய அனுமதியுடன் அன்றைய தினமே ஏற்றிச் செல்லல் வேண்டும்.

தொடர்புகளுக்கு:- 021 221 1505

நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி
தவிசாளர்,
பிரதேச சபை,
வேலணை.

(C-4935)


# ரஷ்யாவுக்கும் இலங்கைக்கும் இடையில் மீண்டும் விமான சேவை

(கொழும்பு)

ரஷ்யாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான விமான சேவை ஒக்டோபர் மாத நடுப்பகுதியில் மீண்டும் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குத் தடையில்லா விமான சேவையை மேற்கொள்வதை உறுதி செய்யமுடியாது என கூறி சில மாதங்களுக்கு முன்பு, ரஷ்ய விமான நிறுவனமான ஏரோஃப்ளோட் நிறுவனம் சேவையை நிறுத்தியது.

இதேவேளை ரஷ்யாவிடம் இருந்து எரிபொருளைக் கொள்வனவு செய்வது தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

எரிபொருளை கொள்வனவு செய்வதற்கான கடன் தொடர்பாக ரஷ்ய அரசாங்கத்துடன் கலந்துரையாடி வருவதாக அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயத்தில் பெருந்தன்மை இருந்தால் அது நற்பண்புகளின் அழகாகப் பிரகாசிக்கும்.
– சீனப் பழமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## திருக்கோணேஸ்வரத்துக்கு யாத்திரை செல்லுங்கள்

திருகோணமலையிலுள்ள திருக்கோணேஸ்வரம் ஆலயம் தமிழர்கள் இந்த நாட்டின் மூத்த குடிகள் என்பதை எடுத்துரைக்கின்ற வரலாற்றுச் சான்றாதாரமாகும்.

தவிர, இலங்கை வேந்தன் இராவணேஸ்வரனால் அமைக்கப்பட்ட சிவனாலயம் என்பதும் இங்கு குறித்துரைக்கப்பட வேண்டிய விடயம்.

இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த திருமூலர் ஈழ நாட்டைச் சிவ பூமி என்று போற்றினார்.

அதனை மேலும் வலுப்படுத்துவதாகத் திருக்கோணேஸ்வரம் ஆலயத்தின் மீது நாயன்மார்கள் பாடிய தேவாரத் திருமுறைகள் அமைகின்றன.

எனினும் திருக்கோணேஸ்வரம் சிவனாலயத்தைச் சுற்றி பாதுகாப்புப் படையினர் முகாமிட்டிருப்பதனாலும் ஆலயத்துக்கு அடியவர்கள் செல்வதற்குப் படையினர் மிகுந்த கட்டுப்பாடுகளை விதித்திருப்பதனாலும் கோணேஸ்வரத்துக்குச் செல்லுகின்ற அடியார்களின் எண்ணிக்கை மிகக் குறைவு எனலாம்.

உண்மையில் ஒரு பெரும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயத்தின் கட்டுக்கோப்பைத் தீர்மானிப்பதில் அங்கு செல்லுகின்ற அடியவர்களின் எண்ணிக்கை உயர்ந்த வகிபங்கை ஆற்றும் என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

இதற்குத் தக்கசான்றுகள் உண்டு. திருவிழாக் காலங்களில் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குச் செல்லுகின்ற அடியவர்களின் எண்ணிக்கையைக் கண்டு, அங்கு கடமையில் இருக்கும் காவல்துறையினர் விறைத்துப் போவர்.

இத்துணை மக்கள் கூட்டம் எப்படி ஒரே நேரத்தில் ஒன்று சேர்ந்தது என்று அதிசயிப்பர்.

இதையும் கடந்து, முருகன் மீது அடியவர்கள் கொண்டுள்ள பக்தி நிலையும் வெளிப்படுத்தப்படுகிறது.

இதேபோல் சிவராத்திரி விரதத்தில் மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் கூடுகின்ற இலட்சக்கணக்கான அடியவர்களால், அந்த ஆலயத்தின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக திருகோணமலை திருக்கோணேஸ்வரம் ஆலயத்துக்குச் செல்லுகின்ற அடியவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதால், ஆலயத்தின் நிலப்பரப்பைக் கபளீகரம் செய்வதிலும் ஆலய வளாகத்தில் பௌத்த விகாரைகளை அமைப்பதிலும் பேரினவாத சக்திகள் தீவிரம் காட்ட, அதற்குத் தொல்லியல் திணைக்களமும் துணை போகிறது.

உண்மையில் தொன்மைமிகுந்த எமது வரலாற்றுத் தலங்களை பாதுகாக்க வேண்டுமாயின், அதற்கான ஒரே வழி குறித்த ஆலயங்களுக்கு அடியவர்கள் சென்று வழிபடுவதை ஊக்குவிக்க வேண்டும்.

அந்த வகையில் இந்த நாட்டின் அனைத்துப் பாகங்களில் இருந்தும் அடியவர்கள் திருக்கோணேஸ்வரத்துக்குத் தல யாத்திரை மேற்கொள்வது அவசியம்.

இத்தல யாத்திரையை சைவ அமைப்புகள் மற்றும் சைவத் தொண்டர்கள் ஊர்தோறும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

# பொருளாதாரக் குற்றங்கள் தொடர்பான ஐ.நா.வின் கரிசனையை நிராகரிக்க முடியாது

## தயாசிறி ஜயசேகர

(கொழும்பு)

பொருளாதாரக் குற்றங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை முன்வைத்துள்ள விடயங்களை நிராகரிக்க முடியாது. பொருளாதாரக் குற்றங்களில் ஈடுபட்ட அரசாங்கத்தில் அங்கத்துவம் வகித்தவர்களே தற்போதைய அரசாங்கத்திலும் இருக்கின்றனர்.

எனவே தான் அரசாங்கம் இதனை மறுத்துள்ளது. ஆனால் பொருளாதாரக் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் உள்நாட்டு பொறிமுறையின் ஊடாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதே தமது நிலைப்பாடாகும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையில் இடம்பெற்றுள்ள பொருளாதாரக் குற்றங்கள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் சு.க.வின் நிலைப்பாட்டை வினவிய போதே தயாசிறி ஜயசேகர இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வரலாற்றில் முதன் முறையாக பொருளாதார குற்றங்களால் இலங்கையில் இடம்பெற்றுள்ள மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா. அவதானம் செலுத்தியுள்ளது.

எனவே கடந்த காலங்களை விட தற்போது முன்வைக்கப்படவுள்ள பிரேரணை இலங்கைக்கும் கடும் பாதகமானதாக அமையக்கூடும்.

எவ்வாறிருப்பினும் பொருளாதாரக் குற்றங்கள் தொடர்பில் ஐ.நா. அறிக்கையில் ஆழமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. உரிய நேரத்தில் சரியான தீர்மானங்களை எடுக்காமை மற்றும் ஊழல் மோசடிகள் தொடர்பில் பொறுப்பு கூறத்தவறியுள்ளமை உள்ளிட்ட காரணிகள் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

ஆனால் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்குள்ள ஆணையின் படி அவரால் மனித உரிமைகள் மாத்திரமே பேச முடியும் என்பதால், பொருளாதார குற்றங்கள் தொடர்பில் முன்வைத்துள்ள காரணிகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்று எமது அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

அரசாங்கத்தின் இந்த பதில் பொறுத்தமற்றதாகும். பொருளாதார ரீதியில் எடுக்கப்பட்ட முட்டாள்தனமான தீர்மானங்களே நாடு இவ்வாறு வங்குரோத்தடைந்துள்ளமைக்கான பிரதான காரணியாகும். அவ்வறிக்கையில் எவ்வாறு அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூற முடியும்?

உண்மையில் பொருளாதாரக் குற்றங்கள் இடம்பெற்ற அரசாங்கத்தில் அங்கத்துவம் வகித்தவர்களே தற்போதைய அரசாங்கத்திலும் உள்ளனர்.

எனவே தான் அவர்கள் ஐ.நா. அறிக்கைக்கு எதிர்ப்பினை வெளியிடுகின்றனர். இலங்கையின் பொருளாதாரம் தொடர்பில் சர்வதேசத்தில் கேள்வி எழுப்பப்படுகின்றமை வெட்கப்பட வேண்டிய விடயமாகும்.

இருந்த போதிலும், ஐ.நா. வலியுறுத்தியுள்ள விடயம் தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது எமது நிலைப்பாடாகும்.

ஏனைய விவகாரங்களைப் போன்றே பொருளாதாரக் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் தொடர்பிலும் உள்நாட்டு பொறிமுறையின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு, தண்டனை வழங்கப்பட வேண்டும் என தெரிவித்தார். (4)

## ராஜபக்ஷக்கள் அரசியலில் இருந்து உடனடியாக ஓய்வுபெற வேண்டும்

### சம்பிக்க ரணவக்க

ராஜபக்ஷக்கள் அனைவரும் அரசியலில் இருந்து ஓய்வுபெற வேண்டும் என்று 43 ஆம் படையணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க வலியுறுத்தினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியானது தவறுகளைத் திருத்திக் கொண்டு, ஜனநாயக வழியில் பயணிக்கத் தயாரில்லையெனில் அக் கட்சியில் உள்ளவர்களுக்கு அரசியல் எதிர்காலம் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், எதிர்க்கட்சிகள் ஆட்சிக்கு வந்திருந்தால் போராட்டக்காரர்கள் இன்று வீரர்கள் ஆகியிருப்பார்கள். ஆனால் ஆட்சி கட்டமைப்பில் ராஜபக்சக்களின் ஆதிக்கம் இன்னும் இருப்பதால் தான் போராட்டக்காரர்கள் தண்டிக்கப்படுகின்றனர் எனவும் சம்பிக்க மேலும் குறிப்பிட்டார். (4-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** பெரிய பொக்கணை, வாதரவத்தை அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரா என்ரபிறைசஸ், எவர்கிறீன் அச்சகம், கரிகணன் பிறைவேட் லிமிடெட், அரசடி வீதி சீனியர் வீதி சந்தி, ஐயனார் கோவிலடி, கலட்டி பிறவுண் வீதி, மனோகரா நாவலர் வீதி, மாவடி, சுட்டாதெரு, கே.கே.எஸ். வீதி ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** எருக்கலம்பிட்டி நீர் வழங்கல் திட்டம், கடற்படை முகாம்- ஓலைத்தொடுவாய், புதிய சில்க் றோடு அகுடிக் கம்பெனி பிறைவேட் (லிமிடெட்) (கடலுணவுக் களஞ்சியம்), கொன்னையன் குடியிருப்பு, மாலுவாடிச் சந்தி, ஓலைத் தொடுவாய், சணி கிராமம், தாழ்வுப்பாடு, தாராபுரம், தாராபுரம் திட்டம், தோட்டவெளி **வவுனியா பிரதேசத்தில்** கூமாங்குளம் கிருஷ்ணா மெடிகிளினிக், மறக்காரம்பளை- கணேசபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## காதல் தோல்வியால் உயிரை மாய்த்த மகன்

### மன வேதனையில் தந்தையும் உடன்கட்டை

கேகாலையில் பாடசாலை மாணவர் ஒருவர் வீட்டில் உள்ள மின்கம்பத்தில் தூக்கிட்டு உயிரை மாய்த்துள்ளார். இதனை அறிந்த தந்தையும் தன்னுயிரை மாய்த்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கேகாலை ரங்வல ஜபுன்வல பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த ஆண்டு க.பொ.த சாதாரண தர பரீட்சை எழுதிவிட்டு முடிவுக்காக காத்திருந்த 17 வயது மாணவனே இவ்வாறு உயிரை மாய்த்துள்ளார்.

உயிரை மாய்த்துக் கொள்வதற்கு முன் அவர் எழுதிய கடிதம் ஒன்றையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

காதல் தொடர்பினால் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக மாணவன் உயிரை மாய்த்துள்ளமை தெரியவந்துள்ளது.

53 வயதான மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர், பொற்கொல்லராக செயற்பட்டு வருகின்றார்.

குடும்பத்தில் இரண்டாவது மகன் உயிரை மாய்த்தமையினால், மன வேதனையில் இரசாயன திரவத்தை பருகி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4-7)

## நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதே முக்கியம்

### மைத்திரி தெரிவிப்பு

கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக நாட்டின் பிரச்சினைகளுக்கு விடை காண்பதே முக்கியம் என சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று காலை இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டைக் கட்டியெழுப்ப இளைஞர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டுமெனவும், அதற்காக இளைஞர்களின் கருத்துக்களை கேட்க வேண்டும் என்றும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (4-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மணல்அகழ்வு நான்கு உழவு இயந்திரங்கள் மீட்பு

## நால்வர் கைது

(தருமபுரம்)

பளை பொலிஸ் பிரிவிற் குட்பட்ட வேம்போடுகேணி பகுதியில் நீண்ட காலமாக சட்ட விரோத மண் அகழ்வு இடம் பெற்று வந்திருந்தது.

இதனால் வேம்போடு கேணி கிராம மக்கள் பாரிய இன்னல்களை சந்தித்து வந் தனர்.

குறித்த விடயம் தொடர்பாக பளை பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழ மைகளில் மேற்கொள்ளப்பட்ட தொடர் சுற்றி வளைப்பின் போது 4 உழவு இயந்திரங்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன்



நால்வர் கைது செய்யப்பட்டு ள்ளனர்.

மேலும் கைது செய்யப்பட்ட வர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில் நாளை மறுதினம் புதன் கிழமை அன்று 4 உழவு இய ந்திரங்களும் கிளிநொச்சி மாவ ட்ட நீதிவான் முன்னிலையில் முற்படுத்தவுள்ளதாகவும் பளை பொலிஸார் தெரிவித்திருந்த னர். (4-316)

# ஸ்கந்தபுர வீதியை புனரமைக்குமாறு பொது மக்கள் கோரிக்கை

(சிவநகர்)

கிளிநொச்சி மற்றும் புது முறிப்பு பகுதியிலிருந்து ஸ்கந் தபுரம் செல்லும் ஸ்கந்த புரம் பிரதான வீதியின் சந்தி யில் உள்ள வீதி பலகால மாக சேதமடைந்து குன் றும் குழியுமாகக் காணப்படுகி றது.

ஜெயபுரம் முக்கொம்பன் வீதியை அன்றாடம் பயன்படுத் துவோர் பல விபத்துக்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே உரியவர்கள் இத னைக்கவனத்திலெடுத்து இத னைச்சீர்செய்து தரவேண்டு மென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-254)

# புதுக்குடியிருப்பில் மதுபான போத்தல்களுடன் ஒருவர் கைது

(தருமபுரம்)

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட விசுவமடு ரெட்பானா பகுதியில் வீடொ ன்றில் குளிர்சாதனப் பெட்டியி னுள் சட்டவிரோதமான முறை யில் அரச மதுபான போத்த ல்களை விற்பனைக்காக வைத் திருந்த நிலையில் தருமபுர பொலிஸ் புலனாய்வுப் பிரிவின ருக்கு கிடைக்கப்பெற்ற தகவலு க்கமைய வீட்டினை சோதனை யிட்டபொழுது ஒரு தொகை மதுபான போத்தல்களுடன் சந் தேகநபர் ஒருவர் தருமபுர பொலிஸ் புலனாய்வுப் பிரிவி



னரால் கைது செய்யப்பட்டு புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக புது க்குடியிருப்பு பொலிஸார் மேல திக விசாரணைகளை மேற் கொண்டு வரும் நிலையில் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வும் தெரிவித்துள்ளனர். (4-316)




எழில், சுகந்தி குறுந்திரைப்படங்கள் கிளிநொச்சி மாவட்ட செயலக திறன் விருத்தி நிலையத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை மீளத்திரையிடப்பட்டது.

# சதுரங்கப் போட்டி

(குப்பிழான்)

யாழ். மாவட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடை யில் யாழ்ப்பாணப் பிர தேச செயலக நலன்புரிச் சங்கத்தினால் ஏற்பாடு செய்து நடத்தப்படும் சது ரங்க சுற்றுப் போட்டி 2022 எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை மற்றும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் காலை 9 மணி முதல் யாழ். வண்ணை வைத்தீஸ் வராக் கல்லூரியில் இடம் பெற உள்ளது.

குறித்த போட்டிகள் ஆண், பெண் இருபாலா ருக்கும் தனித்தனிப் போட்டிகளாக இடம் பெறும்.

போட்டிகளுக்கான விண் ணப்ப முடிவுத் திகதி 22.09.2022 ஆகும். மேலதிக தொடர்புகளு க்கு 0774063310, 0778666155 ஆகிய தொலைபேசி இலக்கங்க ளுடன் தொட ர்பு கொள்ள முடியும் எனவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரி வித்துள்ளனர். (4-18)

# பருத்தித்துறை மருத்துவமனைக்கு புதிய மருத்துவ அத்தியட்சகர்

(கரணவாய்)

பருத்தித்துறை ஆதார மரு த்துவமனைக்கு புதிய மருத் துவ அத்தியட்சகர் நியமிக்க ப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி ஆதார மருத்து வமனை மருத்துவ அத்தியட் சகராக பணியாற்றிய மருத்துவ கலாநிதி. டயாழினி மகேந் திரனே பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு நியமிக்கப் பட்டுள்ளார்.

அதேவேளை பருத்தித் துறை ஆதார மருத்துவமனை யில் பதில் மருத்துவ அத்திய ட்சகராக பணியாற்றிய மருத்துவ கலாநிதி. வே. கமலநாதன் வல் வெட்டித்துறை பிரதேச மருத் துவமனைக்கு மாற்றப்பட்டு ள்ளார். (4-60)

# மோட்டார் சைக்கிள் மீது டிப்பர் மோதியதில் விபத்து

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வட்டுக்கோ ட்டை சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விப த்தில் மோட்டார் சைக்கிள் ஒன்று பகுதியளவில் சேதமா கியுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிவிக்கையில், மாத கலைச் சேர்ந்த இரு பெண்கள் அராலியில் உள்ள உறவினர் களது வீட்டிற்கு பிறந்தநாள் கொண்டாட்டத்திற்குச் சென்று விட்டு வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தனர்.

இதன்போது காரைநகரில் இருந்து யாழ்ப்பாணப் பக்கமாக சென்ற பயணித்துக் கொண்டி ருந்த டிப்பர் வாகனம் வட்டுக் கோட்டை சந்தியடியில் மோட் டார் சைக்கிள் மீது மோதியது.

இதனால் மோட்டார் சைக் கிள் பகுதியளவில் சேதமாகி யுள்ளதுடன் மோட்டார் சைக் கிளில் பயணித்த இரண்டு பெண்களுக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

சம்பவத்தில் விபத்தினை ஏற்படுத்திய டிப்பர் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை வட்டுக்கோ ட்டைப் பொலிஸார் மேற்கொ ண்டு வருகின்றனர். (4-104)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 280 | 300 | 350 | 300 |
| உருளைக்கிழங்கு | 300 | 300 | 280 | 320 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 250 | 300 |
| தக்காளி | 180 | 200 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 250 | 280 | 240 |
| கோவா | 400 | 420 | 450 | 450 |
| கரட் | 300 | 380 | 400 | 450 |
| பூசணி | 140 | 140 | 140 | 200 |
| புடோல் | 120 | 180 | 120 | 200 |
| வாழைக்காய் | 200 | 200 | 140 | 140 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 200-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 180 | 190 | 180 | 180 |
| பாகற்காய் | 400 | 700 | 700 | 800 |
| வெண்டிக்காய் | 160 | 220 | 100 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 200 | 300 |
| பயற்றங்காய் | 250 | 250 | 250 | 150 |
| லீக்ஸ் | 300. | 260 | 300 | 300 |
| பீற்றூட் | 200 | 160 | 180 | 250 |
| கறிமிளகாய் | 600 | 700 | 600 | 600 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 700 | 400 |
| போஞ்சி | 550 | 450 | 700 | 700 |
| கத்தரிதம்புள்ள | 200 | 250 | — | 250 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 200 | 300 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 50-75 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 350 | 300 | 350 | 320 |
| முள்ளங்கி | 120 | 180 | 120 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 50 |
| வல்லாரை | 30 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 140 | 80 | 100 | 140 |

# மே 9 வன்முறை மேலும் ஐவர் கைது

(கொழும்பு)

நாட்டில் கடந்த மே 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறை களுடன் தொடர்புடைய மேலும் 5 சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவி த்துள்ளது.

குறித்த சந்தேக நபர்கள் தலங்கம, கண்டி, பலங் கொடை, மிரிஹான மற்றும் மீரிகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளிலேயே கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவி த்துள்ளது.


இவ்வாறு கைது செய்யப் பட்ட சந்தேகநபர்கள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, பாராளுமன்ற உறுப்பினர் அகில எல்லாவல உள்ளிட்ட வர்களின் வீடுகளுக்குள் அத்து மீறி நுழைந்து வாகனங்கள் உட்பட பல்வேறு சொத்துக்க ளுக்கு சேதம் விளைவித் தமை, அவற்றிற்கு தீ மூட்டி யமை, பணம் மற்றும் துப்பா க்கிகளை கொள்ளையிட்டுச் சென்றமை தொடர்பில் இவர் கள் கைது செய்யப்பட்டுள்ள னர். (4-...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவார்ப்பணம்

# சிவபதப் பேறு அறிவித்தல்



தோற்றம்
03 – 05 – 1950

மறைவு
17 – 09 – 2022

# திரு. பாலசுப்பிரமணியம் ஸ்ரீரங்கநாதன்

கடையிற் சுவாமி கோவில் வீதி, நீராவியடியைப் பிறப்பிடமாகவும் பிறவுண் வீதி, நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. பாலசுப்பிரமணியம் ஸ்ரீரங்கநாதன் அவர்கள் நேற்று முன்தினம் (17.09.2022) சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் - கமலம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற சோமசுந்தரம் - சிவகலை தம்பதியரின் அன்பு மருமகனும் மாலினியின் அன்புக் கணவரும் ஸ்ரீமகளின் பாசமிகு தந்தையும் நிஷாந்தனின் அன்பு மாமனாரும் திருவரேஷ்வரின் பாசமிகு பேரனும் இராஜேஸ்வரன், நாகேஸ்வரன், துரைசிங்கம், சரஸ்வதி, ஸ்ரீகாந்தன், ஸ்ரீரஞ்சினி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஓங்காரமூர்த்தி, கௌரி, சாவித்திரி, ராதா, அன்பரசி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று (19.09.2022) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிறவுண் வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம்.

தகவல் :-
குடும்பத்தினர்

(12821)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (12808)

076 825 7716 (ஆகாஸ்)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## ராஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும். (12817)

தொடர்பு: ராஜ் - 077 679 6623

## இலவச விசா வாய்ப்பு

அமெரிக்க லொத்தர் விசா



அமெரிக்கா செல்ல பாஸ்போட் எடுத்துவிட்டீர்களா? (C-4921)



!!அவசியம் வேண்டாம்!! October 05 பதிவு ஆரம்பம்

18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் விண்ணப்பிக்கலாம் குடும்பத்திற்கு இரண்டு வாய்ப்புக்கள் PASSPORT அவசியம்.

எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்காவில் நூற்றுக்கணக்கானோர் வாழ்கின்றனர்

V2 TRAVELS 0768226244 0768226240

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532

## யப்பான் சைக்கிள்

அறிவுள்ளோரின் தெரிவு



40,000/= இருந்து

1.லேடீஸ் சைக்கிள்கள்
2.ஜென்ஸ் சைக்கிள்கள்
3.கியர் சைக்கிள்கள்
4.மடக்கும் சைக்கிள்கள்
5.பாரம் ஏற்றும் சைக்கிள்கள்
6.LED ஓட்டோமற்றிக் லைட் சைக்கிள்கள்
7. Baby சைக்கிள்கள்

இலகுவான ஓட்டம்.
பாட்ஸ் தாராளமாக உண்டு.
வருடா வருடம் கழுவிப் பூட்டுதல்,
திருத்த வேலைகள் இல்லை.
நீண்டகாலப் பாவனை.

யப்பான் சைக்கிள் விற்பனை செய்ய விரும்புவர்கள் தொடர்பு கொள்ளவும்.
விஷேட விலைக்கழிவு உண்டு.

விற்பனைக்கு பிந்திய சேவைகள் (திருத்த வேலைகள்)

(C-4942)

யப்பான் சைக்கிள் B பசார்

கந்தரோடை றோட், T.P-078 615 5929, 076 414 0137

சுன்னாகம் (சுன்னாகம் சந்தியிலிருந்து கந்தரோடை றோட்டில் 500m)

## தீபம் கல்வி நிலையம்

O/L 2022

இல.11, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர்களுக்கான மீட்டல் வினாவிடை வகுப்புக்கள்

**(Revision Paper Class)**

நடைபெறுகின்றன.

தமிழ் மொழி மூலம்

| | | | |
|---|---|---|---|
| ஆங்கிலம் | திரு.B.கமல் | திங்கள் | மாலை 6.00 - 7.30 |
| கணிதம் | திரு.G.உஷானந்தன் | புதன் | மாலை 6.00 - 7.30 |
| தமிழ் | தமிழ்சுடர் திரு.க.மு.நித்தி | வியாழன் | மாலை 6.00 - 7.30 |
| வரலாறு | திரு.K.கலைச்சந்திரன் | வெள்ளி | மாலை 6.00 - 7.30 |
| விஞ்ஞானம் | திரு.S.கோபிநாத் | சனி | மாலை 6.00 - 7.30 |

ஆங்கில மொழி மூலம்

| | | | |
|---|---|---|---|
| Maths | MR.A.Kabilan | Wed | 6.00 - 7.30 Pm |
| Science | MR.S.Kobinath | Sun | 6.00 - 7.30 Pm |

- ஆர்வம் உள்ள வெளி மாணவர்கள் கலந்து கொள்ள முடியும்.
- தனிப்பாட அனுமதி உண்டு.
- தரம் 10இன் அலகுகள் முழுமையாக பூர்த்தி செய்யப்படும்.
- மூன்று மாதிரி வினாத்தாள்கள் செய்து விடப்படும்.
- அலகு ரீதியாக கடந்த கால வினாத்தாள்கள் (Past Paper) மீட்டல் செய்யப்படும்.
- கட்டண விபரங்களுக்கும் முற்பதிவுகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

(12812)

தொடர்புகளுக்கு:- 077 224 7781

'தீபம் எம் பிள்ளைகளின் எழுச்சிமிகு எதிர்காலம்'

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 04 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- கைதடி சந்தியில் இருந்து 750M தூரத்தில்
- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- 20 அடி பாதையுடன்

076 755 8606

(12790)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 36 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 1/2 Km தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 1/2 Km தூரத்தில்
- புத்தூர் சந்தியில் இருந்து (பருத்தித்துறை வீதி) மட்டுவில் செல்லும் பிரதான வீதியில் (காபற் வீதி) இருந்து இரண்டாவது காணி
- 775 இலக்க போக்குவரத்து பேருந்துகள் செல்லும் காபற் வீதி
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்வதற்கும் வீடுகள் அமைப்பதற்கும் உகந்த காணி
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை 1½ இலட்சம் மட்டும்
- 20 அடிப் பாதையுடன்

(12790)

077 658 5999, 076 436 5814, 077 874 8135


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 1949 . 11 . 07

உதிர்வு 2022 . 08 . 20

அமரர்

### நடராசா நவரத்தினராசா

தேன் கலந்த தெள்ளமுதாய் நின்தீன்சுவை மென்பேச்சே
எங்கு நாம் இனியிப் புவிதனிற் கேட்போம்
வான் உயரப் புகழ் கூடிவரும் போதும் வஞ்சமில்லா
உள்ளமதை நாடித்தான் இனி எங்கு போவோம்
காந்தமென கவர்ந்திழுக்கும் இருவிழிகள் கூறும்
கருணைமிகு பார்வைதனை காணவும் மாட்டோமா
கூர்மதி நிறைந்த நல் அறிவுரை செறிந்திடும்
வார்த்தையேனும் செவி வந்து சேராதோ விழி
நீர் தழும்பி நின்றழுதோம் நினைவழியா உங்கள்
பேரலையாய் பெருகிவரும் நினைவுகளால் ஐயனே!

வளவத்தை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்

(C-4940)

## மரண அறிவித்தல்

### துரையப்பா ஸ்ரீரெங்கநாதன்

தோற்றம் 24.05.1944

மறைவு 16.09.2022



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி பத்தர் கடவையையும் கொழும்பு ஜோசப் டயஸ் லேனையும் வதிவிடமாகக் கொண்டிருந்த துரையப்பா ஸ்ரீரெங்கநாதன் அவர்கள் 16.09.2022 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ்சென்ற துரையப்பா - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் அளவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற சிவக்கொழுந்து - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மல்லாவியைச் சேர்ந்த திருமதி ஸ்ரீசந்திர சுசேனாவின் பாசமிகு அண்ணனும் காலஞ்சென்ற விக்கினேஸ்வரியின் அன்புக் கணவரும் பாலசிறி (பிரான்ஸ்), பத்மசிறி (கொழும்பு), ரஜனி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தினி, ஜீவிதா, ஜெய்பிரகாஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும் பாலவிக்னஜா, அபிஷனா, துளசிஹா, வின்சிஹா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (18.09.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் வத்தளை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (19.09.2022) திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு மாதம்பிட்டிய மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- பாலசிறி (சிறி),
பத்மசிறி (ராஜன்), ரஜனி (லலி)

(C-4943)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ... விலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.09.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org